**அத்தனகலை பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூன் 25 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்டம்பர் 13 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அத்தனகலை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மோட்டார் வண்டிகளும் ரூபா 13,492,000 மற்றும் நிலையான வைப்புக்களுக்கு ரூபா 107,219 என்பவற்றால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கிலிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பின்னர் விளக்கமளிக்கப்படும். |
| (ii) | ஐந்து தொழில் வைப்புக்களுக்கான ரூபா 729,323, 06 கட்டிட மீதிகளது பெறுமதியாகிய ரூபா 2,251,666 என்பன கணக்கில் நீக்கப்பட்டிருந்தன. | கொடுக்கல் வாங்கல் கணக்கிலிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பின்னர் விளக்கமளிக்கப்படும். |
| (iii) | முன்னைய ஆண்டில் நிர்மாண வேலை மேற்கொள்ளப்படாத 15 செயற்திட்டங்களின் பொருட்டு மூலதனமாக்கப்பட்ட ரூபா 5,253,187 கணக்கில் நீக்கப்பட்டிருந்தது. | நிர்மாண வேலை நடைபெறாத செயற் திட்டங்களது பெறுமதி கணக்கில் நீக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பின்னர் விளக்கமளிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ஆறு செயற்திட்டங்களது ரூபா 1,369,143 கடன்கொடுத்தோர் குறைவாகவும் 4 செயற்திட்டங்களது ரூபா 315,476 கடன் கொடுத்தோர் அதிகரித்தும் கணக்கிலிடப்பட்டிருந்தன. | கணக்கு திருத்தம் செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பின்னர் விளக்கமளிக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | இரு ஆண்டுகள் கடந்த ரூபா 9,787,259 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பின்னர் விளக்கமளிக்கப்படும். |
| (ஆ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 டிசம்பர் 31 ஆந் திகதி 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குரிய 248 கடைகளும் 05 ஆண்டுகளுக்கு ஒருமறை மறுபரிசீலனை செய்யப்படவில்லை. | சுற்றிக்கையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பின்னர் விளக்கமளிக்கப்படும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 19,574,937 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 53,964,007 ஆகும்.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் நிதியம் பிரதேச மக்களின் அதிகூடிய பயனைப் பெறக்கூடியவாறு திட்டமிடப்பட்டு செலவிடப்படுவது சபையின் நோக்கமாயினும், சபைக்குரிய ரூபா 22 | சபையின் நோக்கங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் 06 நிலையான வைப்புக்களிலிருந்தன. | | |
| (ஆ) | 2014 நிலவிவரும் ரூபா 25,000 பெறுமதியான கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைகளைத் தீர்வு செய்வதற்குநடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைகள் தீர்வு செய்யப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட் ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 26,326,000 | 30,025,147 | 29,610,416 | 27,194,998 | 18,909,000 | 35,427,575 | 30,751,450 | 26,372,753 |
| (ii) | வாடகை | 16,421,000 | 17,390,062 | 18,623,858 | 1,401,952 | 14,916,000 | 17,373,089 | 18,325,021 | 6,392,095 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,723,000 | 1,507,520 | 1,710,478 | - | 1,023,000 | 292,410 | 311,410 | 202,958 |
| (iv) | ஏனைய வருமானம் | 85,185,000 | 85,045,651 | 104,317,836 | 105,270,206 | 69,196,000 | 69,928,143 | 24,643,077 | 126,813,288 |

### 2.3.2 தீர்வையும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பட்டியலிடப்பட்ட வருவாயை அறவிடுவதிலான முன்னேற்றம் 95 சதவீதமாயினும், வருவாய் நிலுவையின் அறவீட்டு முன்னேற்றம் 0 சதவீதமான இருந்தது. | வருவாய் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறான தீர்வை வரி ரூபா 26,904,434 ஆகும். இதில் 01 ஆண்டிற்கு குறைவான ரூபா 4,463,971, 1-3 ஆண்டுகள் வரையிலான ரூபா 6,417,946, 3-5 ஆண்டுகள் வரையிலான ரூபா | தீர்வை நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | 3,829,206 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 12,197,310 மீதிகள் என்பன உள்ளடங்கியிருந்தன. | | |
| (இ) | ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 12,197,310 நிலுவை மீதியில் ரூபா 8,434,734 எகொடபாத்த உப அலுவலகத்திற்குரியதாகும். இந்த நிலுவை மீதியில் உள்ளடங்கிய 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,632,457 மீதி 852 கூறுகளைக் கொண்டது. இதில் ரூபா 747,837 மீதியில் ரூபா 10,000 க்கு மேற்பட்ட 56 கூறுகள் இருந்தன. | நிலுவையாக உள்ள மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஈ) | வேயாங்கொடை உப அலுவலகத்தில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 114,513 மீதி நிலுவையாக இருந்தது. இதில் ரூபா 10,000 க்கு மேற்பட்ட 03 கூறுகள் இருந்தன. சியநே கோறளை புடவைக் கைத்தொழில் நிறுவனத்திடமிருந்து ரூபா 92,379 அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 2.3.3 கடை வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வேயாங்கொடை உப அலுவலகத்திற்குச் சொந்தமான 27 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 4,093,625 மீதியை அறவிடுவதற்குச் சபை தவறியிருந்தது. | முற்கொடுப்பனவு மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பின்னர் விளக்கமளிக்கப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டிலிருந்து நிலுவை மீதி ரூபா 1,377,419 ஆகும். இம்மீதி 1-5 ஆண்டுகள் வரையிலானவை. | கடை வாடகை நிலுவை அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பின்னர் விளக்கமளிக்கப்படும். |

### 2.3.4 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களைப் பெற வெண்டிய வியாபார நிறுவனங்கள் 41 ஆகும். இவற்றிற்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படாது வியாபார அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றாடல் அனுமதிப் பத்திரமின்றி வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கப் படலாகாது | பதில் வழங்கப்படவில்லை. |

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 129 ஆம் பிரிவின் குறிப்பிடப்பட்ட பட்டோலையின் பிரகாரம் ரூபா 99,200,000 முத்திரைக் கட்டணம் அறவிடப்படும் போது அதிகாரச் சட்டத்தின்படி வகைப்படுத்தப்பட்டு பெறப்படவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரமின்றி வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கப்படலாகாது | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பின்னர் விளக்கமளிக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் ஆற்றப்பட வேண்டிய 08 பணிகள் தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | நிலைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்கு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது உப வீதிகளுக்கு முதன்மையளித்து தயாரிக்க வேண்டும். |

**(ஆ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபை கழிவுப்பொருள் வரியை அறவிடப்படாததுடன் சபையின் ஒட்டுமொத்த பிரசேதத்தில் 40 சதவீதத்தையும் உள்ளடக்குமாறு மாத்திரமே கழிவுப்பொருட்களைச் சேகரித்து கழிவுப் பொருட்களை அகற்றும் வேலை நடாத்தப்பட்டிருந்தது. | அதிகூடிய சேவையை வழங்க வேண்டும். | குடியிருப்போர் அவர்களது காணிகளிலேயே கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை மேற்கொள்வர். |
| (ii) | கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ளவில்லை. | உடன்படிக்கையில் ஈடுபட வேண்டும். | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் மூலம் வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கும் அதற்கமைய, கொடுப்பனவுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(இ) சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 306 புகார்கள் மக்களிடமிருந்து சபைக்குக் கிடைக்க பெற்றுள்ளன. அவற்றுள் ஏறக்குறைய 54 புகார்கள் தீர்வு செய்யப்படாதிருந்தன. | பொது மக்களின் புகார்கள் தீர்வு செய்யப்பட வேண்டும். | பின்னர் பதிலும் விளக்கமும் வழங்கப்படும். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்குககள் சம்பந்தமான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் உலகளாவிய சுட்டுக்களின் | திட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வழிகாட்டலின் பிரகாரம் முறையான பயிற்சி 2019 தொடக்கம் 2022 வரையான |

| | | |
|---|---|---|
| ஊடாக பிரதேச சபை அதிகாரத்துக்குட்பட்ட பொது மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நெடுங்காலத் திட்டம் 2018 ஆம் ஆண்டில் தயாரிக்கப்படவில்லை. | | நெடுங்காலத்திட்டம் தயாரிக்கப்படும். அதன் பொருட்டு எமது பரப்பெல்லைக்குள் உள்ளடக்கப்படும். அவ்வாறே 17 நிலைத்து நிற்கவல்ல விடயங்களுள் பெரும்பாலானவை தற்போது நடைபெற்றவாறுள்ளன. |

**3.2 முகாமைத்துவ முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது வைப்புப் பதிவேட்டில் முன்னைய ஆண்டுகளுக்குரிய மீதிகளை பொது வைப்புப் பதிவேட்டை இணைக்கம் செய்யாமையால் ரூபா 35,129,203 வைப்புக் கணக்கு திரண்ட மீதியின் பிழையற்ற தன்மையைக் கணக்காய்வில் உறுதி செய்ய முடியவில்லை. | பதிவேடுகள் முறையாகப் பேணப்பட வேண்டும். | பதிவேட்டைப் பேணுவதிலான வழுவின் காரணமாக இத்தவறு ஏற்பட்டுள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருவாய் பரிசோதகர்களுக்கான 04 பதவி வெற்றிடங்கள் 2010 முதல் 2015 வரை இருந்த போதும், அவற்றிற்கு ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். | வழக்கு நடவடிக்கைகள் காரணாக வருவாய் பரிசோதகர்களுக்கான 4 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு தாமதமாகி உள்ளது. |

**3.4 ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவையிலிருந்து விலகிய ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 117,850 அறவிடப்படுவது நிச்சயமற்றதாக உள்ளது. | கடன் மீதியை அறவிட வேண்டும். | அவதானிக்கப்படாதுள்ள ரூபா 305,507 கடன் அறவிடப்பட்டவாறுள்ளது என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |

**3.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுசீ வாகனச் சேவையை வழங்குவதற்கு பெறப்பட்ட ரூபா 96,271 வைப்பானது 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது. இம்மீதி 2014-2017 காலப்பகுதிக்குரியதாகும். | வருவாயிலிடப்பட வேண்டிய வைப்புக்கள் வருவாயிலிடப்பட வேண்டும். | முன்னைய ஆண்டிற்குரிய வருவாயிலிடப்படாத வைப்புக்கள் துரிதமாக வைப்பிலிடப்பட வேண்டும். |
| (ஆ) | உடற்பயிற்சி நிலையத்தின் ரூபா 489,000 கிரயமுடைய 03 உபகரணங்கள் செயலற்றலாறிருந்தன. பழுதுபார்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொருத்தமானவாறு பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | செயலற்ற இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்குக் கொள்வனவு நிறுவனத்திடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன. |
| (இ) | பிரதேச சபையின் 356 கடைகளில் 46 க்கு மாத்திரமே 2018 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 253 கடைகள் 2018 டிசம்பர் 10 ஆந் திகதிளவிலும் குறைந்த வாடகையான ரூபா 300 வாாடகையே வழங்கப்பட்டிருந்தன. இவ்வாடகையானது 1980 - 1989 தீர்மானம் செய்யப்பட்டதாகும். | கடையை வாடகைக்கு வழங்குகையில் உடன்படிக்கையில் கைச்சாத்திடவும் மதிப்பீட்டைப் பெறவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஈ) | வேயாங்கொடை பொதுச் சந்தை கூட்டுத்தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 69கடைகள் தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளின் குறைந்த வாடகை ரூபா 500 ஆக இருந்ததுடன், அதி உயர் வாடகை 2,175 மாத்திரமாகவே இருந்தது. | புதிய மதிப்பீடுகள் பெறப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | குறைந்த வாடகைக்குப் பெறப்பட்ட ஏறக்குறைய ரூபா 10,000 முதல் ரூபா 25,000 வரை மாதாந்த வாடகைக்கு குத்தகையாளர்களால் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கைப்படி நடக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (iii) | கணக்காய்வு சந்தர்ப்பத்தில் 69 கடைகளில் 17 மூடியவாறிருந்தன. 05 கடைகள் சுவீகரிக்கப்படவிருந்தன. | கடைகளை மூடியமைக்கான காரணம் அறியப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 3.5 வருடாந்த பொருள் / கையிருப்புக் கணிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினது நூலகப் புத்தகம் கணிப்பின் பிரகாரம் ரூபா 99,335 பெறுமதியான 541 புத்தகங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 316 புத்தகங்கள் என்பன தொலைந்து போனமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தொலைந்து போன புத்தகங்கள் சம்பந்தமாகத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஐயவினாக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மீளாய்வாண்டின் பொருட் கணிப்பு சபை இனங்கண்ட தொலைந்து போன புத்தகங்கள் சம்பந்தமாக நூலகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |

### 3.5.1 இணங்காணப்பட்ட இழப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்க்கட்டணத்தைச் செலுத்தத் தாமதமாகியதால் நீர் இணைப்பு துண்டிக்கப்பட்ட 05 சந்தர்ப்பங்களில் ரூபா 17,250 கட்டணமாகவும் தண்டப்பணமாகவும் செலுத்தப்பட்டிருந்தது. | பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். | நீர்க்கட்டணத்தை செலுத்த தாமதமாகிய உப அலுவலகங்கள் இரண்டும் தண்டப்பணத்தைச் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளன. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 305யு வகை மோட்டார் கிறேடரது ஓட்ட அட்டவணை 2016 யூன் 19 முதல் பயன்படுத்தப்படவில்லை. 02 ஆண்டுகளின் பின்னர் 2018 மே 03 ஆந் திகதி பழுதுபார்க்க அனுப்பப்பட்டு பின்னர் ஏலவிற்பனைக் குள்ளாகியிருந்தது. அக்காலப்பகுதியின் போது | தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். பதிலும் விளக்கமும் பின்னர் வழங்கப்படும். |

இவ்வாகனத்திற்கு பூரண காப்புறுதி ரூபா 343,086 செலவிடப்பட்டிருந்தது.

**3.6 பொருட் கொள்வனவு**

**3.6.1 வழங்கலும் சேவையும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது பிளாஸ்டிக் 1000 கைபிடி நாற்காலிகள் கொள்வனவு செய்யப்படும் போது அந்த 1000 நாற்காலிகளும் ஒரே நிறுவனத்திடமிருந்து ரூபா 1,122 வீதப்படி கொள்வனவு செய்யப்படக் கூடியதாகவிருந்தும், 500 நாற்காலிகள் ஒன்று ரூபா 1,250 வீதம் இன்னுமொருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதால் ரூபா 64,000 நிதி இழப்பு ஏற்பட்டது. | நட்டம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். பதிலும் விளக்கமும் பின்னர் வழங்கப்படும். |

**3.6.2 தீர்வு செய்யப்படாத கணக்காய்வு பந்திகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டின் அறிக்கையில் அவதானிக்கப்பட்ட ரூபா 450,000 பெறுமதியான நீர் மோட்டார் சம்பந்தமாக 104 ஆம் நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்திற் கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | அத்தகைய பிரதேச சபையின் பேரின் இயந்திரத்தின் மோட்டார் தொலைந்து போனமை தொடர்பாக 104 ஆம் நிதிப்பிரமாணத்தின் படி ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டு பொறுப்பானவர்களை நிர்ணயிக்குமாறு உதவி ஆணையாளர் அலுவலகம் கோரப்பட்டுள்ளது. |